**0உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.65/2022**

**CNR- TNKK07-000219-2022**

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>தக்கலை காவல் நிலையம்.<br>குற்ற எண்.127/2021 |
| எதிரிகளின் பெயர்கள் | : | 1. தினேஷ் (வயது 25)<br>த/பெ. நாகராஜன்<br>சடையப்பர் கோவில் தெரு,<br>வில்லுக்குறி அஞ்சல்.<br><br>2. தாஸின், (வயது 24)<br>த/பெ. மகசூத்ரகுமான்<br>304, மேட்டுக்கடை<br>தக்கலை அஞ்சல். |
| அரசு தரப்பில் எதிரிகளின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | அரசுத்தரப்பில் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307, 506(2) ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307ன் படியும். 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |
| நீதிபதியின் முடிவு | : | 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307ன் படியும். 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 ன் படியும் குற்றவாளிகள் இல்லை. |

தீர்ப்புரை : 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307ன் படியும் 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 ன் படியும் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரிகளை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் ஆர்.பி. எண் 6/2021–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள TN 57 AW 1551 என்ற பதிவெண் கொண்ட ஸ்கார்பியோ வெள்ளை நிற காரை அதன் உரிமையாளர் நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி சான்று பொருளை மேல்முறையீட்டின் தீர்ப்பிற்கு உட்பட்டு உரிமையாளரே வைத்துக்கொள்ளலாம் என்றும் பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கு என் முன்பு 11.02.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.அபியோவா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## <u>தீர்ப்புரை</u>

25.02.2021ம் தேதி தக்கலை பீர் முகம்மது அப்பா தர்கா ஆண்டு விழா நடைபெற்ற போது இரவு 9 மணியளவில் தர்கா பக்கம் இருந்த திருவிழா கடை அருகில் சாட்சி 1 சமீரும் சாட்சி 2 இர்ஷாத்தும் சாட்சி 3 அப்சலும் சாட்சி 4 பீரும் நின்று பேசிக்கொண்டிருக்கும் போது, எதிரிகளும் ஒரு சிறுமியும் ஐஸ் வாங்கி மூன்று பேரும் பாதையில் இடையூறாக நின்று சாப்பிட்டுக்கொண்டிருந்ததை சாட்சி 1 சமீர் தட்டி கேட்டதற்கு, 1வது எதிரி சாட்சி 1 ஐ பார்த்து தேவிடியா மோனே நீ யார்டா என்னை தட்டி கேட்க, நான் யார் தெரியுமா வில்லுகுறி நாகராஜன் மகன்டா என்று மிரட்டிக்கொண்டு சாட்சி 1ன் கன்னத்தில் ஓங்கி அடித்துள்ளான். உடனே சம்பவத்தை பார்த்து ஆட்கள் வரவே அவர்கள் வந்த TN 57 AW 1551 ஸ்கார்பியா வெள்ளை நிற காரை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுள்ளார். அதன்பிறகு அன்று இரவு சுமார் 12 மணியளவில் 2ம் எதிரி சாட்சி 2 இர்ஷாத்தை தொடர்பு கொண்டு சமீரை அழைத்துக்கொண்டு குமாரகோவில் வா நாம் சமாதானம் பேசுவோம் என்று அழைத்து வரவழைத்து கொல்லன்விளை பெட்ரோல் பம்ப் அருகில் வைத்து TN 57 AW 1551 ஸ்கார்பியா வெள்ளை நிற காரை தினேஷ் ஓட்டி கொண்டு வரவும் அதில் இருந்த 2ம் எதிரி இதோ வரார்கள் இவர்களை வண்டியேத்தி கொல்லுடா என்று கூற தினேஷ் மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும் ஓட்டி சாட்சி 1, 2 சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோத அவர்கள் சுதாரித்து விலகி கொண்டதால் உயிர் தப்பினார்கள். அவன் வேகமாக ஓட்டியதில் TN 57 AW 1551 ஸ்கார்பியா வெள்ளை நிற கார் ரோட்டில் கவிழ்ந்ததும் எதிரிகள் இருவரும் ஆயுதங்களுடன் இறங்கி வந்து 1ம் எதிரி கையில் இருந்த வெட்டு அருவாளால் சாட்சி 1 யை பார்த்து இத்தோடு செத்து தொலைந்து போ என்று கூறி அவரது தலையை நோக்கி ஓங்கி வெட்டவும் அவர் சற்று விலகியதால் உயிர் தப்பியுள்ளார். 2ம் எதிரி கையில் இருந்த இரும்பு பைப்பால் இர்ஷாத்தை நோக்கி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டு அவனது தலையை நோக்கி ஓங்கி அடிக்கவும் அவனும் சற்று

விலக்கிக்கொண்டதால் உயிர் தப்பியுள்ள குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307, 506(2) ன் படி தக்கலை காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 27/2021 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிகளுக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் இவ்வழக்கானது அமர்வு வழக்கு எண் 65/2022 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**

அ.சா.4 அருளப்பன் தனது சாட்சியத்தில் தான் இதற்கு முன்னர் 04.03.2021ம் தேதி தக்கலை காவல்நிலைய பொறுப்பில் இருந்த போது சமீர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண். 127/2021 பிரிவுகள் 294(பி), 323, 307 , 506(2), இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 பதிவு செய்ததாகவும், அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.5 சுதேசன் தனது சாட்சியத்தில், தான் இதற்கு முன்பு தக்கலை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய போது 04.03.2021ம் தேதி தக்கலை காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. அருளப்பன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த தக்கலை காவல்நிலைய குற்ற எண்.127/2021 பிரிவுகள் 294(பி). 307, 323, 506(2) இ.த.ச வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.03.2021ம் தேதி காலை 06.15 மணிக்கு சாட்சிகள் ஆசிஸ், பாசித் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும், பின்னர் சம்பவ இடத்திலிருந்து TN 57 AW 1551 என்ற ஸ்கார்பியோ வெள்ளைநிற காரை அத்தாட்சியில் கைப்பற்றினேன் என்றும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5 என்றும், சாட்சிகள் சமீர், இர்ஷாத், ஏபல், பீர் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 27.03.2021ம் தேதி 08.30 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து

கைது செய்து சாட்சிகள் ரமேஷ், ஆல்பின் ஆகியவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 27.08.2021ம் தேதி 1வது எதிரியை கோணங்கும் என்ற இடத்தில் வைத்து கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், படிவம் 95 அ.சா.ஆ.6 என்றும் TN 57 AW 1551 என்ற ஸ்கார்பியோ வெள்ளைநிற கார் சா.பொ.1 என்றும், வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 31.08.2021ம் தேதி விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரிகள் மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

10. ***பிரச்சனைக்கான தீர்வு*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 ன் படியும் குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் எதுவும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

12. இருதரப்பு வாதங்கள், வழக்கு ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

13. அரசுத் தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நேரில் பார்த்த சாட்சிகளாக அ.சா.2 மற்றும் அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.4, அ.சா.5 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் ஆவார்கள். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், 25.02.2021ம் தேதி திருவிழா சமயம் கூட்டத்தில் யாரோ தன்னை அடித்து விட்டதாகவும் சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். கண்ணால் கண்ட சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களுடைய சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், 25.02.2021ம் தேதி திருவிழா சமயம் கூட்டத்தில் யாரோ அ.சா.1ஐ அடித்து விட்டதாகவும் சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். எதிரிகள் அ.சா.1ஐ அசிங்கமாக பேசி வெட்டருவாளால் கொலை செய்ய முயற்சி செய்ததாக அரசு தரப்பு வழக்கு. ஆனால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களுடைய சாட்சியத்தில், அவ்வாறு எதிரிகள் அ.சா.1ஐ அசிங்கமாக பேசி வெட்டருவாளால் கொலைசெய்ய முயற்சி செய்ததாக சாட்சியத்தை முன்னிடவில்லை. அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.1 முதல் அ.சா.3 சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டதாக கேட்கப்பட்ட கேள்வியை மறுத்து சாட்சியத்தை முன்னிட்டுள்ளார்கள். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான

சாட்சிகள் அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதவாக சாட்சியம் எதையும் அளிக்காமல் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார்கள்.

14. மேலும் அரசு தரப்பில் வழக்கு சம்பவத்தில் எதிரிகளை தொடர்புபடுத்தி கூறக் கூடிய எந்தவொரு சாட்சியமும் இல்லை. எனவே இந்த வழக்கில் எதிரிகள் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளதை போல குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் எனக் கூறுவதற்கு எந்த விதமான கண்ணுற்ற சாட்சியமும் இல்லை. அவ்வாறான நிலையில் புலன் விசாரணை அதிகாரிகளான அ.சா.4, அ.சா.5 ன் சாட்சியம் அரசுத் தரப்பு வழக்கை மேம்படுத்துவதாகவோ அரசு தரப்பில் சொல்லப்படுவதை போல வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிக்கக் கூடியதாகவோ அமையாது.

15. எனவே இந்த வழக்கில் வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை நிரூபிக்கக் கூடிய சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 307ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 ன் படியும் குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)—ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் இவ்வழக்கில் ஆர்.பி. எண் 6/2021—ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள TN 57 AW 1551 என்ற பதிவெண் கொண்ட ஸ்கார்பியோ வெள்ளை நிற காரை அதன் உரிமையாளர் நீதிமன்றத்தில் இருந்து

இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி சான்று பொருளை மேல்முறையீட்டின் தீர்ப்பிற்கு உட்பட்டு உரிமையாளரே வைத்துக்கொள்ளலாம் என்றும் பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.03.18 11:55:35 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி
பத்மனாபபுரம்

**இணைப்பு:–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | – | திரு. சமீர் |
| 2) | அ.சா.2 | – | திரு. இர்ஷாத் |
| 3) | அ.சா.3 | – | திரு. அப்சல் |
| 4) | அ.சா.4 | – | திரு.அருளப்பன் |
| 5) | அ.சா.5 | – | திரு. சுதேசன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் ;**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | புகார்மனு |
| 2. | அ.சா.ஆ.2 | – | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ.4 | – | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ.5 | – | அத்தாட்சி |
| 6. | அ.சா.ஆ.6 | – | படிவம் 95 |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்</u>**

சா.பொ.1 – TN 57 AW 1551 என்ற பதிவெண் கொண்ட ஸ்கார்பியோ வெள்ளை நிற கார்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>**

– இல்லை –

**<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்;</u>**

– இல்லை –

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.03.18 11:55:44 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்